# சாத்தானை சமாளிக்க செய்ய வேண்டியவைகள் மற்றும் செய்ய வேண்டாதவைகள் (4:15-31)

*சாத்தான் நம்மை அழிக்க முயற்சி செய்யும்போது நாம் செய்ய வேண்டியது என்ன என்பதற்கு இதுவரை நாம் நான்கு ஆலோசனைகளைக் கண்டோம்: (1) வியப்படைய வேண்டாம், (2) உங்கள் கரங்களைத் தூக்கியெறிந்து விட வேண்டாம், (3) சாத்தானின் சட்டங்களின்படி செயல்பட வேண்டாம், மற்றும் (4) உங்களை நீங்களே மறந்து விடுங்கள். சபைக்கு முதலில் ஏற்பட்ட உபத்திரவங்களைப்பற்றி நாம் படித்து முடிக்கின்ற இவ்வேளையில், நமது வேத பாடப் பகுதியிலிருந்து மேலும் ஐந்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள விரும்புகிறோம்.*

## *சாத்தான் நியாயமாகச் செயல்படுவான் என்று எதிர்பார்க்க வேண்டாம் (4:15-17)*

*பேதுரு தமது தற்காப்பு வாதத்தை முடித்த பிறகு, ஆலோசனை சங்கத்தார், பேச்சற்று, திகைத்துப்போய் அமர்ந்தனர். யாரோ ஒருவர், அவர்கள் யாவரும் இரகசிய ஆலோசனை செய்வது என்று ஆலோசனை கூறியபோது அந்தக் குழப்பமான அமைதி கலைக்கப்பட்டது. "அப்பொழுது அவர்களை ஆலோசனைச் சங்கத்தை[1]விட்டு வெளியே போகும்படி கட்டளையிட்டு, தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக்கொண்டு: " (வ. 15).[2]*

*அவர்கள் எதை ஆலோசனை பண்ணியிருக்க வேண்டும்?*

மேசியாவைச் சிலுவையிலறைந்த பயங்கரமான பாவத்தை எப்படி நீக்குவதென்று ஆலோசனை பண்ணியிருக்க வேண்டும்! பேதுருவின் உரையை முன்பு கேட்டவர்கள் போலவே இவர்களும் ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவியிருக்க வேண்டும் (2:37). ஆயினும், அவர்கள் தவறு செய்வதிலேயே அதிக ஆர்வமாயிருந்தனர். இயேசுவை மேசியா என்று அவர்கள் ஏற்றுக்கொண்டால், விரைவிலேயே வேறொரு பிரதான ஆசாரியரும், ஆலோசனைச் சங்கத்தாரும் வந்துவிடுவர் - அவர்களுக்கு வேலையற்று, அதிகாரமற்றுப் போய்விடும்! அவர்கள் தங்கள் மேட்டிமை, தப்பெண்ணம் மற்றும் நடைமுறை என்ற தடைகளை உடைத்தெறிய முடியவில்லை. தங்களுடைய பயங்கரமான தவறைத் திருத்திக் கொள்வதற்குப் பதிலாக, அவர்கள், "இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்?" என்று கேட்டனர் (வ. 16அ).

பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் அவர்கள் கபடமற்றிருந்திருக்கலாம்: ''எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக் கூடாது'' (வ. 16ஆ). இந்நாட்களில் அற்புதங்கள் என்று சொல்லப்படுபவைகளைப் போல் இன்றி, புதிய ஏற்பாட்டில் அற்புதங்கள் உடனடியானதாக, நிறைவானதாக மற்றும் தேவ பக்தியற்றவர்களைக் கூட நம்ப வைப்பதாக இருந்தன![3]

ஆலோசனை சங்கத்திலிருந்தவர்கள், அந்த மனிதன் குணம் பெற்றதை அறிந்தனர்; பேதுரு மற்றும் யோவானின் சாட்சி உண்மையானதென்று அவர்கள் அறிந்தனர்; ஆகையால் இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருந்தார் என்பதையும் அறிந்தனர்! ஆயினும், "இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்?" என்பதே அவர்கள் கேள்வியாய் இருந்தது மற்றும் கிறிஸ்தவத்தைப் பரவவிடாமல் தடுப்பதிலேயே அவர்கள் அக்கறையாயிருந்தனர் (வ. 17அ). இங்கு ஒரு மாய்மாலம் ஆளுருவம் பெற்றது! ''இப்பொழுது அவர்கள் ஒருவர் மற்றவரின் முகத்தை, ஒழுக்க ரீதியான ஒரு திகைப்புடன் பார்த்தனர், ஒருவேளை முகத்தைப் பாராமலே இருந்தனர்" என்று மெக்கார்வியின் விளக்கவுரை கூறுகிறது.

"குறிப்பிடத்தக்க அற்புதம் ஒன்று நடந்திருந்தும் அதுவும்

கூட அவர்களின் கடினமான இருதயங்களை மாற்றவில்லை. இந்நாட்களில், பாவ - வியாதியில் உள்ள உலக மக்களின் கவனத்தைத் திருப்ப, நமக்கு அதிகமான "அற்புதங்கள்" தேவை என்று சிலர் கூறுகின்றனர். ஆயினும், அற்புதங்கள் ஒருபோதும் "இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவபலனாய்" (ரோமர் 1:16) இருந்ததில்லை! நமக்கு இன்னமும் "அற்புதங்கள்" தேவை யில்லை! அதிகமான சுவிசேஷப் பிரசங்கங்களே நமக்குத் தேவை!

ஒன்றுமறியாத அந்த மனிதர்களுக்கு என்ன செய்வது என்ற சிக்கலான சூழ்நிலைபற்றி ஆலோசனை சங்கத்தார் எவ்வளவு நேரம் ஆழ்ந்து சிந்தித்தனர் என்று நமக்குத் தெரியவில்லை. நிறைவாக, யாரோ ஒருவர், "இந்த நாமத்தைக் குறித்துப் பேசக் கூடாதென்று, அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்த வேண்டு மென்று" (வ. 17ஆ) ஆலோசனை கூறினார். பேதுருவும் யோவானும் தைரியமாய்ப் பேசிய போதிலும், அவர்களையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பயமுறுத்த முடியுமென்று யூதத் தலைவர்கள் நம்பினார்கள். சில நாட்களுக்கு முன்பு இயேசு வைக் கைது செய்தபோது இந்த அப்போஸ்தலர்கள் பயந்து ஓடியவர்கள் தானே? இயேசுவின் நாமத்தினால் "ஒரு மனிதரிட மும் அவர்கள் பேசக் கூடாதென்று" அவர்களை எச்சரிக்க முடிவு செய்தனர்.

இவ்வார்த்தைகளை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்: "ஒரு மனிதரிடமும் பேசக் கூடாது." ஆலோசனை சங்கத்தார், "இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று" பேதுருவுக்கும் யோவானுக்கும் கட்டளையிட அவர்கள் விரும்பினார்கள் (வ. 18). இயேசுவின் நாமத்தைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது வெளியரங் கமாகவோ குறிப்பிடுவதைத் தடை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் இருந்தது. இயேசுவின் நாமத்தை எந்த இடத்திலும் எந்த முறையிலும், எந்த நேரத்திலும், எவர் ஒருவருக்கும் பேசுவதைத் தடை செய்ய வேண்டும் என்பதே அவர்களின் திட்டமாகும்! அப்போஸ்தலர்களும், மற்ற எல்லா கிறிஸ்தவர்களும் இந்தப் பிரகடனத்துக்குக் கீழ்ப்படிந்து விட்டால், இயேசுவின் நாமம் இந்தப் பூமியின் மீது மறுபடியும் எப்பொழுதும் கேட்கப்பட முடியாது!

*"ஒரு நிமிடம் பொறுங்கள்! இப்படிப்பட்ட பொறுப்பற்ற கட்டளையைப் பிறப்பிப்பதற்கு ஆலோசனை சங்கத்தாருக்கு எவ்வித உரிமையும் இருக்கவில்லையே! பேதுருவும் யோவானும் எந்தவொரு சட்டத்தையும் மீறவில்லை, அவர்கள் தண்டனைக்குட்பட முகாந்திரம் எதுவும் இல்லை. ஆலோசனை சங்கத்தாரின் முடிவு நியாயமானதல்லவே!" என்று மறுக்க நாம் தயாராகலாம். சாத்தான் நியாயமானவன் என்று யார் சொன்னார்கள்? சுற்றி வளைத்துப் பேசும் மக்களிடம் பழகும்போது கிறிஸ்தவர்கள் அடிக்கடி குழப்பமடைவதையும், ஆர்வம் குறைவதையும் அநேக ஆண்டுகளாக நான் கண்டிருக்கிறேன். பின்வரும் கூற்றையும் நான் கேட்டிருக்கிறேன்: "அதை (அல்லது அவரை) என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே!" இவ்வார்த்தைகளை நான் கேட்கும்பொழுது, பொதுவாக நான், "நீங்கள் அதைப் புரிந்து கொள்ள முடியாதது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். இது உங்கள் மனம் சுற்று வழியில் செல்லவில்லை என்பதைக் காட்டுகிறது"[4] என்று பதில் அளிப்பதுண்டு.*

*சாத்தான் உங்களுக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது அவன் நியாயமாகச் செயல்படவில்லையே என்று நீங்கள் வியப்படைய வேண்டாம். அது அவனது இயல்பாகும். அவன் சுற்றி வளைத்து வருவதை எதிர்பாருங்கள். அவனது முன்னுதாரணத்தைப் பின்பற்றாதபடி எச்சரிக்கையாயிருங்கள்! (அவனது சட்டங்களின்படி செயல்படக் கூடாதென்பதை நினைவில் வையுங்கள்!)*

## *சாத்தானுக்கு ஒரு அங்குலம்[5] கூட இடமளிக்க வேண்டாம் (4:18-22)*

*ஆலோசனைச் சங்கத்தார், அவர்கள் இருந்த அறைக்குள் பேதுருவையும் யோவானையும் மறுபடியும் அழைத்தனர். அவர்களை அழைத்து: "இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்" (வ. 18). அந்தச் சூழ்நிலையின் கடுமையைப்பற்றி குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள். நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றமானது தனது முடிவை அங்கு*

முன்வைத்தது. இஸ்ரவேலில் மிக வல்லமை பொருந்திய சட்டமியற்றும் குழுவானது ஒரு சட்டத்தை இயற்றியது: இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசுவதும் போதிப்பதும் இப்பொழுது சட்ட விரோதமானதாகும்!

சபை கூடிவருதல் சட்ட விரோதமானதென்று ஆலோசனை சங்கத்தார் கூறவில்லை என்பதைக் கவனியுங்கள். பாடுவதையும் ஜெபிப்பதையும் அவர்கள் சட்ட விரோதமென்றாக்கவில்லை. நற்காரியங்கள் செய்வதை அவர்கள் சட்ட விரோதமானதென்றாக்கவில்லை. இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசுவது அல்லது போதிப்பது மட்டுமே சட்ட விரோதமானதென்றார்கள். நற்செய்திக்கு மட்டுமே சாத்தான் பயப்படுகிறான்! நாம் ஒன்றாகக் கூடிவருவதையோ நமது குடும்பங்களில் வேதபாட வகுப்புகள் மற்ற ஆராதனைகள் இவற்றைச் செய்வதுபற்றியோ அவன் கவலைப்படுவதில்லை. நாம் மற்றவர்களுக்கு உபகாரங்கள் அல்லது உதவி செய்வதுபற்றி அவன் கலங்குவதில்லை (இயேசுவின் நாமத்தை அவைகளில் வலியுறுத்தாத வரையில்).[6] இதற்கு மாறாக, "பெரு வழிகளிலும் வேலிகளருகிலும் போய்" (லூக். 14:23), இயேசுகிறிஸ்துவினருகில் வரும்படி மக்களை அழைக்கும்போது, அவன் மிகவும் பதற்றமடைகிறான்! சிலுவை அவனுக்கு வீழ்ச்சி என்பதை அவன் அறிகிறான் (வெளி. 12:11)! துரதிர்ஷ்டவசமாக, அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் நாமத்தைக் குறித்துப் "பேசவும் போதிக்கவும் கூடாதென்று" கட்டளையிடப்பட்டிருக்க, நம்மில் அநேகருக்கு அவருடைய நாமத்தைக் குறித்துப் பேசவும் போதிக்கவும் கட்டளையிடப்பட்டுள்ளது!

அப்போஸ்தலர்கள், ஆலோசனைச் சங்கத்தாரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தால் என்னவாயிருக்கும்? என்று மறுபடியும் நான் கேட்கிறேன். சபையின் வரலாற்றில் அது எவ்வளவாய் இக்கட்டுள்ள ஒரு தருணமாய் இருந்தது! மழை பெய்த பிறகு எப்போதாவது நீங்கள் விறகுகளை வைத்து நெருப்பு உண்டாக்க முயற்சி செய்ததுண்டா? ஒரு சிறு சுவாலை எரியும்படி நீங்கள் செயல்படுகிறீர்கள். அத்துடன் புற்களையும், குச்சிகளையும் சேர்த்து நெருப்பு உண்டாகும் வரையில் நீங்கள் அத்துடன் இசைந்து செயல்படுகிறீர்கள். இந்த அனுபவம் உங்களுக்கிருந்தால், அந்த நெருப்பை அணைப்பது கடினமல்ல

*என்பதை அறிவீர்கள். ஒரு சிறு காற்று, அதிக ஈரமான விறகுகள் விரைவில் சேர்க்கப்படுதல் இன்னும் பல சிக்கல்கள் ஒன்று சேர்ந்து அந்தச் சிறு சுவாலையை அணைத்து விட முடியும். பேதுருவும் யோவானும் சனதெரீன் சங்கத்தின் முன்நின்ற அவ்வேளையில், சபையானது படபடத்துக் கொண்டிருந்த அந்த சிறு சுவாலையைப்[7] போலத்தான் இருந்தது. அந்தப் பிரகடனமானது கீழ்ப்படியப்பட்டிருந்தால், உலகத்தின் வரலாறு எவ்வளவு மாறுபட்டதாய் ஆகியிருக்கும்![8]*

*ஒரு அங்குல இடம்கூடச் சாத்தானுக்குக் கொடுப்பதில்லை என்று பேதுருவும் யோவானும் தீர்மானமாயிருந்தனர்! இவ்விதமாய் எனக்குக் கட்டளையிடப்பட்டிருந்தால் - அந்த ஆணைக்கு நான் கீழ்ப்படிவதில்லை என்று திட்டமிட்டாலும் - என் விருப்பங்களைப்பற்றி வாயைத் திறக்காமலிருப்பதே ஞானமானதாகும் என்று நான் கருதியிருக்கலாம், ஆனால் அப்போஸ்தலர்கள் அப்படிக் கருதவில்லை. அமைதியா யிருத்தல் என்பது ஆமோதித்தல் என்று விளங்கிக் கொள்ளப் படக்கூடும். "பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத் தரமாக: தேவனுக்குச் செவி கொடுப்பதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" என்று பதில் அளித்தனர் (வ. 19).*

*அப்போஸ்தலர்களின் இக்கூற்று, "நாட்டின் நியாயதி பதிகளை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே இதை இவ்விதமாய் நியாயம் தீர்ப்பதில் உங்களுக்கு ஒன்றும் தொந்தரவில்லை: நாங்கள் உங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா?" அவர்களின் இந்தக் கேள்வி ஆலோசனைச் சங்கத்தாருக்கு,[9] இரண்டிலொன்றை ஏற்றுக் கொள்ளக்கூடிய சிக்கலான ஒரு சூழ்நிலையை முன் வைத்தது. நாட்டின் மதத்தினுடைய பிரதிநிதிகள் என்ற முறையில், "தேவனுக்குச் கீழ்ப்படிவதே மற்ற எல்லாவற்றைப் பார்க்கிலும் முன்னதாக இருக்க வேண்டும்" என்று பதில் அளிக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்; ஆனால், அதிகாரம் மற்றும் பதவிபற்றி அக்கறைப்பட்ட மனிதர்கள் என்ற முறையில், அப்போஸ்தலர்களுக்கு அனு கூலமாகக்கூடிய ஒரு பதிலைத் தர அவர்கள் தைரியமாய்த்*

*தங்களை ஒப்புக்கொடுக்க முன் வரவில்லை.*

*ஆலோசனைச் சங்கத்தாரின் பதிலைப்பற்றிக் கவலைப் படாமல், பேதுருவும் யோவானும் செயல்பாட்டில் இறங்கத் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். "நாங்கள் கண்டவைகளை யும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார் கள்" (வ. 20)! "கண்டதையும் கேட்டதையும்" பேசுவது என்பது ஒரு சாட்சியின் அடிப்படை விளக்கமாயிருக்கிறது. அவர்கள் தமக்குச் சாட்சிகளாயிருக்க வேண்டும் என்று இயேசு அவர்களுக்கு ஆணையிட்டிருந்தார் (1:8); அவர்கள் தெரிவு செய்வதற்கு ஒன்றுமில்லை! சூரியனை உதிக்காமலிருக்கும் படியும், பறவைகளை பாடாமலிருக்கும்படியும், அன்னையர் களை தங்கள் குழந்தைகளை அன்பு செய்யாமலிருக்கும்படியும் நீங்கள் கட்டளையிட்டால் எப்படியிருக்கும்? அப்போஸ்தலர் கள், இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்கக் கூடாதென்ற கட்டளையும் அதைப் போன்றதே! (இக்கருத்து ரிச்சர்ட் ரோஜர்சின் பிரசங்கத்திலிருந்து தழுவப்பட்டது.)*

*கலிலேயா மற்றும் யூதேயாவின் பாதை வழிகளில் நீங்களும் நானும் இயேசுவோடு நடந்து சென்றதில்லை. ஆனால் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய நற்செய்தி நூல்களில் அவரோடு நாம் நேரத்தைச் செலவிட்டுள்ளோம் என்று ரிச்சர்ட் ரோஜர்ஸ் கூறினார். மேலும் அவர் (இயேசு) நமது வாழ்க்கை யில் நம்மோடே கூட இருந்து நம்மைப் பெலப்படுத்துகிறார். அப்போஸ்தலர்களைப் போலவே, "நாங்கள் இயேசுவைப்பற்றி மற்றவர்களுக்குக் கூற வேண்டும். நாங்கள் நற்செய்தியைப் பற்றிப் பேசுவதையும், போதிப்பதையும் நிறுத்த முடியாது" என்று நாமும் கூற வேண்டும்!*

*''அவர்களை மேலும் பயமுறுத்திய பிறகு[10] ... விட்டு விட்டார்கள்'' (வ. 21ஆ). அந்தப் பயமுறுத்தல்கள் ஒன்றும் சாதாரணமானவைகள் அல்ல. சில நாட்களுக்குப் பிறகு, அப்போஸ்தலர்கள் கைது செய்யப்பட்டு அடிக்கப்பட்டனர் (5:17-40). மிக விரைவில் ஸ்தேவானும் கொல்லப்படவிருந்தார் (6:8-7:60).*

> *... ஜனங்களுக்குப் பயந்து[11] (அவர்களைத் தண்டிக்க வகையொன்றுங் காணாமல்)[12] அவர்களைப் பயமுறுத்தி*

*விட்டு விட்டார்கள். அற்புதமாய்ச் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான்*[13] *(வ. 21ஆ, 22).*

*மக்களின் பார்வையில் அப்போஸ்தலர்கள் இருவரும் தேவனுடைய சிறப்பான ஊழியர்களாயிருந்தனர், எனவே அவர்களுக்கு ஏதொன்றும் செய்துவிட ஆலோசனை சங்கத்தாருக்குத் தைரியம் இல்லை.*[14]

## உங்கள் பெலத்தின் பிறப்பிடத்தினருகில் நெருங்கியிருங்கள் (4:23-27)

வசனங்கள் 23 முதல் 31 முடிய, அப்போஸ்தலர்களுடைய பெலத்தின் பிறப்பிடத்தை நாம் காணுகின்றோம். ஊதியத்திற்கு உழைக்கும் ஊழியர்கள் மற்ற பணியாளர்கள், சபைக் கட்டிடங்கள் மற்றும் திட்டங்கள், கிறிஸ்தவப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகள் இவற்றை இந்நாட்களில் நாம் பெரும்பாலும் காணுகின்றோம்.[15] ஆதி சபையில் இவை எதுவும் இல்லை. கிறிஸ்தவர்களிடம் என்ன இருந்தது? அவர்கள் ஒருவரொருவருடனும், தேவனுடனும் நெருங்கிய பிணைப்புப் பெற்றிருந்தனர்.

பேதுருவையும் யோவானையும் ஆலோசனை சங்கத்தார் போகும்படி அனுமதித்தபோது, அப்போஸ்தலர்கள் உடனடியாக, கிறிஸ்துவுக்குள் தங்கள் சகோதரர்களைத் தேடினார்கள். "அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு, தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்து, பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவற்றையும் அறிவித்தார்கள்" (வ. 23). KJVயில் "தங்கள் சொந்தத் தோழர்களிடம்" என்றுள்ளது. NIVயில், "தங்கள் சொந்த மக்களிடம்" என்றுள்ளது. RSVயில் "அவர்களுடைய நண்பர்களிடம்" என்றுள்ளது. மூல மொழியில் எளிமையாக, "தங்கள் சொந்தத்திடம்" என்றுள்ளது; வேறுபட்ட மொழி பெயர்ப்பாளர்கள் தொடர்ந்து வரும் வார்த்தைகளைப் பயன்படுத்தினர். பேதுருவும் யோவானும் மற்ற அப்போஸ்தலர்களிடம் சென்றனர் என்று நான் நம்புகிறேன்: (1) இதுவரைக்கும் நாம், அப்போஸ்தலர்களின்

*போதனை மற்றும் பிரசங்கம்பற்றி மட்டுமே படித்துள்ளோம், இவ்விதமாக ஆலோசனை சங்கத்தாரின் பயமுறுத்தல் அவர் களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது. (2) தைரியத்தோடு பேசவும், பலமளிக்கவும் வேண்டுமென்று (இவ்விடத்தில்) ஜெபித்தவர்களின் (4:29, 30) ஜெபமானது அப்போஸ்தலர் களுக்கே அதிகமாய் பயன்படத் தக்கதாயிருந்தது. (3) அந்த இடம் அசைந்தபோது, ஜெபித்தவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டனர் (4:31); பிறகு உடனடியாக அப்போஸ்தலர்கள் பலமடைந்தனர் (4:33; 5:12) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4) ஆலோசனைச் சங்கத்தாரால் தங்கள் பிரகடனத்தை மீறியதாகக் கைது செய்யப்பட்டவர்கள் (5:28) அப்போஸ்தலர்களாகவே இருந்தனர் (5:18).*

*"தங்கள் சொந்த தோழர்கள்" என்ற சொற்றொடர் யாரைக் குறிப்பிடுகிறது என்பது ஒருபுறமிருக்க, பேதுருவும் யோவானும் அவர்களுக்குச் சாத்தான் கடினமான நேரத்தைக் கொடுத்தபோது, யாரிடம் திரும்ப வேண்டுமோ, அதைச் செய்தனர். இயேசுவுக்கு நண்பர்கள் தேவையாயிருந்தனர், அதே போல அப்போஸ்தலர்களுக்கும், நம் ஒவ்வொருவருக்கும் நண்பர்கள் தேவைப்படுகின்றனர். தேவன் சபையை ஏற்படுத் தியதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். ஒப்புக் கொடுத்த ஒரு கூட்டத்தாரிடமிருந்து நாம் பெலத்தைப் பெற வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாகும். சாத்தானுடைய கடுமை யான தாக்குதல்களுக்கு நீங்கள் தயாராயிருக்க வேண்டு மென்றால், கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதர சகோதரி களுடன் பெலத்த பிணைப்பைக் காத்துக் கொள்ளுங்கள்!*

*சிலர், "எனக்கு வேறு ஒருவரும் தேவையில்லை. எனது சொந்தத்திலேயே நான் எல்லாவற்றையும் செய்துகொள்ள முடியும்" என்று தற்புகழ்ச்சியுடன் கூறலாம். உங்கள் சகோதர சகோதரிகள் உங்களுக்குத் தேவையில்லையென்றால் அதைப் பற்றி நீங்கள் தற்புகழ்ச்சியடையாதீர்கள். இது தற்போது நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கைக்குத் தன்னம்பிக்கையூட்டுதல் தேவை யில்லை என்று மட்டுமே பொருளாகின்றது! கர்த்தருக்கென்று நீங்கள் அக்கினியாயிருந்தால், பேதுரு மற்றும் யோவானுக்குத் தந்ததுபோலவே சாத்தான் உங்களுக்கும் கடினமான நேரத்தைத் தருவான், நீங்கள் உங்கள் சக கிறிஸ்தவர்களிடம்*

ஓட வேண்டியதாகும்!

வசனம் 24ல் நாம் காண்கின்றபடி, பேதுருவும் யோவானும் தங்கள் பெலத்தைப்பெற இன்னொரு மூலத்தை யும் கொண்டிருந்தனர். அப்போஸ்தலர்கள் நம்மைப் போலிருந் திருந்தால், வசனம் 24, "அவர்கள் இதைக் கேட்டு, மிகவும் ஆழமான வகையில் துயரப்பட்டு, 'காரியங்கள் நன்கு நடந்து கொண்டிருந்தது' என்று நாங்கள் அறிந்தோம்!" உண்மையா யிருப்பது மிகவும் நல்லது" என்றோ அல்லது, "அவர்கள் இதைக் கேட்டு, மிகவும் கோபப்பட்டு, 'இதை அவர்கள் நமக்குச் செய்ய முடியாது' என்று கூறி, ஆலோசனைச் சங்கத்திற்கு அணிவகுத் துச் சென்றனர்" என்றோ அல்லது, அவர்கள் இதைக் கேட்டு, அதிகாரத்தில் இருந்தவர்களை வெளியேற்றும்படி "ஆர்ப் பாட்டம் செய்தனர்" என்றோ தொடங்கியிருக்கும்! இதற்கு மாறாக, நாம், "அவர்கள் இதைக் கேட்டு, ஒருமனப்பட்டு[16] தேவனை நோக்கிச் சத்தமிட்டு[17] ..." (வ. 24அ) என்று வாசிக்கின்றோம். அப்போஸ்தலர்கள் தங்கள் வல்லமையின் மாபெரும் மூலமாகிய தேவனிடம் திரும்பினார்கள்.

சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைத் தரும் இவ்வித சந்தர்ப்பங்களில் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள, நாம் நமது சகோதரர்களிடம் மட்டுமல்லாது, தேவனிடத்திலும் நெருங்கிப் பிணைத்துக்கொள்ள வேண்டும்! "ஜெபம் என்பது பொறுப் பிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதல்ல; அது தேவனுடைய செயலாற்றும் திறனுக்கு நமது பதில் ஆகும்" என்று வாரென் W. வயர்ஸ்ப் விளக்கமளிக்கிறார்.

வசனங்கள் 24 முதல் 30 வரையில், நடபடிகள் நூலில் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது ஜெபத்தை நாம் பெறுகின்றோம். இதற்கு முந்தைய (யூதாஸுக்குப் பதில் நியமனம் செய்தல் பற்றிய) ஜெபமானது தேவன் "இருதயங்களை அறிகிறவர்" என்பதை வலியுறுத்தியது (1:24). இந்த ஜெபம் தேவனுடைய ராஜரீகத்தை[18] வலியுறுத்தியது. இது, "கர்த்தாவே, நீர் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளி லுள்ள யாவற்றையும்[19] உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்" (வ. 24ஆ) என்று தொடங்குகிறது. கர்த்தர் என்று மொழியாக்கம் செய்யப்பட்ட கிரேக்க வார்த்தை இவ்விடத்தில் *kurios* என்ற வழக்கமான வார்த்தையாக இல்லாமல், "despot" (*despotes*),

*முழுமையான வல்லமை பெற்றவர்*[20] *என்ற பொருளுடைய வார்த்தையாக உள்ளது! இவ்விதமாக, அநேக மொழிபெயர்ப்புகள் "ராஜரீகம் செய்யும் கர்த்தாவே"*[21] *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. அவர்கள், எல்லா வல்லமையையும் பெற்ற, எல்லாவற்றையும் (சனதெரீன் சங்கத்தார் உட்பட யாவரையும்) உண்டாக்கின, கட்டுப்படுத்துகின்ற ஒருவரிடத்தில் வேண்டுகோளுடன் தங்கள் ஜெபத்தைத் தொடங்கினர்!*

*அப்போஸ்தலர்கள் சந்தித்த இந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில், தேவனுடைய கட்டுப்பாடு எப்படியிருந்தது என்பதை அடுத்த நான்கு வசனங்களும் வலியுறுத்துகின்றன. முதலாவது, இதில் வேத வசனங்கள் வேண்டிக் கூறப்படுகின்றன:*[22]

> *புறஜாதிகள் கொந்தளித்து,*[23] *ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும், கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங் கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின்*[24] *வாக்கினால் உரைத்தீரே (வ. 25, 26).*[25]

*அப்போஸ்தலர்கள் தங்கள் சகோதரரிடத்திலும், தேவனிடத்திலும் மட்டுமல்லாமல், வேத வசனங்களிடத்திலும் நெருங்கியிருந்தனர்! அவர்கள் இவ்வசனப் பகுதியைப் பழைய ஏற்பாட்டின் நூலில் இருந்து படித்திருக்க முடியாது (சாதாரண ஜனங்கள் வசனப் பிரதிகளை சொந்தமாக வைத்திருந்ததில்லை); இதை அவர்கள் மனனம் செய்திருந்தனர். சாத்தானுடைய தாக்குதல்களுக்கு நீங்கள் தயாராக வேண்டுமானால், தேவனுடைய வசனம் இன்னொரு மூல ஆதாரம் ஆகும்! அதை வாசியுங்கள்; அதைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதை மனனம் செய்ய ஒப்புக்கொடுங்கள்!*

*முதல் ராஜரீக சங்கீதமாகிய*[26] *சங்கீதம் 2ல் இருந்து இந்த மேற்கோள் வருகின்றது. இராஜாக்களின் ஆளுகைக்கு இடைப்பட்ட காலத்தில் வழக்கமாக நிலவி வந்த குழப்பமான கால இடைவெளியை இவ்வசனங்கள் குறிக்கின்றன. சுற்றியுள்ள நாடுகள் இதை, நாட்டின் மீது படையெடுத்துத் தாக்கக்கூடிய*[27] *ஒரு வாய்ப்பாகப் பார்த்தன. "கர்த்தருக்கு விரோதமாகவும்,*[28] *அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும்" அவர்கள் செய்யும்*

*முயற்சிகள் யாவும் "விருதாவானவை" என்று சங்கீதக்காரர் அறிவித்தார். மூலபாஷையில், "அவருடைய கிறிஸ்து [அபிஷேகம் பண்ணப்பட்டவர்]" என்பது இஸ்ரவேலின் இராஜாவைக் (1 சாமு. 26:9) குறித்தது, ஆனால் "அபிஷேகம் பண்ணப்பட்டவருக்குரிய"வைகளாக சங்கீதத்தில் சொல்லப் பட்ட எல்லாவற்றையும் எந்த ஒரு மனித இராஜாவும் முழுமையாக நிறைவேற்றவில்லை. இவ்விதமாக, சங்கீதம் 2, வரப்போகிற மேசியாவையே குறித்தது என்பதை யூதர்கள் சரியாகப் புரிந்திருந்தனர்.*

*இயேசுவுக்கு நேர்ந்ததை சங்கீதம் 2 மிகச் சரியாக முன் நிழலாகக் காட்டிற்று: "ஏரோதும், பொந்தியு பிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம் பண்ணின[29] உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய[30] இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங் கூடினார் கள்" (வ. 28). அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு விரோதமாக ராஜாக்கள், அதிகாரிகள், புறஜாதிகள் மற்றும் "ஜனங்கள்" ஆகிய நான்கு குழுவினர் கூடுவார்கள் என்று தாவீது கூறினார். இந்த நான்கு குழுக்களும் இயேசுவுக்கெதிராகத் தங்கள் பெலத்தைக் காட்டினர்: ஏரோது இராஜா, பிலாத்து அதிகாரி, புறஜாதி (ரோமாபுரி) வீரர்கள் மற்றும் இஸ்ரவேல் மக்கள்![31]*

## தேவனை நம்பியிருங்கள் (4:28-30)

*ஜெபத்தின் நிறைவுப்பகுதியில், தேவன்மீதுள்ள தங்கள் நம்பிக்கையை அப்போஸ்தலர்கள் வலியுறுத்தினார்கள். தேவனே முழுமையாகக் கட்டுப்படுத்துபவர் என்பதை அவர்கள் நம்பினர். அந்த நான்கு குழுக்களும், "உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி" கூடிவந்தார்கள் என்று வசனம் 28 குறிப்பிடுகின்றது.* NIV*யில் "என்ன நடைபெற வேண்டுமென்று உம்முடைய வல்லமையும் சித்தமும் ஏற்கனவே தீர்மானித் திருந்ததோ அதை அவர்கள் செய்தனர்" என்றுள்ளது. ஒவ் வொரு நிகழ்ச்சியும் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் பாகமாகவே இருந்தது! ("அவர் களை அவ்வாறு செய்யும்படி தேவன் கட்டாயப் படுத்தினார்*

என்பதல்ல, ஆனால் அவர்களையும், அவர்கள் தாங்களே தேர்ந்துகொண்டு செய்த செயல்களையும் தேவன் தமது இரட்சிப்பின் நோக்கங்களுக்குப் பயன்படுத்தச் சித்தமானார்" என்று Lewis Foster குறிக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், எருசலேமின் வல்லமையுள்ள தலைவர்களால் தொடங்கப்பட்ட உபத்திரவம், தேவன் சூழ்நிலையின் மேலுள்ள தமது கட்டுப்பாட்டை இழந்துவிட்டார் என்று நிரூபிப்பதில்லை. மாறாக, நடந்தவைகள் ஒவ்வொன்றும் தேவன் உறுதியாகக் கட்டுப்படுத்தினார் என்பதையே நிரூபித்தன. சாத்தான் நமக்கு ஒரு கடினமான நேரத்தைத் தரும்போது, நமது வாழ்க்கையில் எல்லாம் கட்டுப்பாட்டை இழந்து நிற்கிறதென்று நாம் காணும் போது, எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்ற - தீமையிலிருந்தும் நன்மையை உண்டாக்கக் கூடிய-ஒருவரை நாம் தொழுகிறோம் என்பதை நினைவுகூர வேண்டும் (ரோமர் 8:28)!

வசனங்கள் 29 மற்றும் 30ல் நாம் அப்போஸ்தலர்களின் வேண்டுகோள்களைக் காணுகின்றோம், ஜெபத்தின் இந்தப் பகுதியை அடையும்போது, நான் நின்று, ஆழ்ந்த யோசனை செய்வதுண்டு: "தேவன் எல்லா வல்லமையுமுள்ளவர், மற்றும் முழுமையாகக் கட்டுப்படுத்துபவர் என்று அறிந்த நிலையில், இந்த மனிதர்களில் ஒருவனாக நான் இருந்திருந்தால் என்ன கேட்டிருப்பேன்?"[32] கிறிஸ்துவின் விரோதிகளைத் தண்டிக்கும்படி நான் கேட்டிருந்திருக்கலாம். உபத்திரவத்தை நிறுத்தும்படி நான் அவரைக் கேட்டிருந்திருக்கலாம். குறைந்தது, உபத்திரவம் தொடர்ந்தால் அவரது பாதுகாப்பையாவது நான் கேட்டிருந்திருப்பேன் என்பது நிச்சயம். இவை எவற்றையும் அப்போஸ்தலர்கள் கேட்கவில்லை. மாறாக, பின்வருவதை அவர்கள் கேட்டனர்:

> இப்பொழுதும், கர்த்தாவே, அவர்களுடைய பயமுறுத்தல்களை[33] தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர்[34] உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள் (வ. 29, 30).

*ஆலோசனைச் சங்கத்தாரைப் பொறுத்தளவில், "கர்த்தாவே, அவர்களுடைய பயமுறுத்தல்களைக் கவனித்தருளும்" என்று மட்டும் அவர்கள் கேட்டனர். வேறு வார்த்தைகளில் சொல்லு வதென்றால், "கர்த்தாவே, இவ்விஷயத்தை நாங்கள் உமது கரங்களில் ஒப்புவிக்கிறோம். இவர்கள் செய்திருக்கிறவைகள் யாவையும் நீர் கவனியும், உம்முடைய சித்தத்தின்படியே பாதுகாத்துக் கொள்ளும்" என்றாகிறது.*

*சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது, பழிக்குப் பழி வாங்கக் கூடிய அல்லது கோபம் மிக்க ஆவியைக் கொள்ளாதபடிக்கு நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். பவுல், "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது" என்று எழுதினார் (எபே. 4:31). மேலும் அவர்,*

> *பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங் கொடுங்கள். அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலேவெல்லப் படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் 12:19-21).*

*நீங்கள் ஆழமாகத் துன்பப்படுத்தப்பட்டிருந்தால், என்ன நடந்திருக்கிறது என்பதைக் "கவனிக்கும்படி" கர்த்தரிடம் கேட்டுக் கொள்ளுங்கள். பிறகு, விஷயங்களை அவருடைய கரத்தில் ஒப்புவித்துவிட்டு. உங்கள் வாழ்வில் தொடர்ந்து செல்லுங்கள்!*

*ஆலோசனைச் சங்கத்தார் தங்களுக்குச் செய்திருந்ததுபற்றி அப்போஸ்தவர்கள் கவலைப்படவில்லை - அல்லது ஆலோசனை சங்கத்தார் என்ன செய்யக் கூடும் என்று கூட அவர்கள் கவலைப்படவில்லை - ஆனால் அவர்களுடைய அறைகூவலுக் குத் தாங்கள் சமமாக இருக்க முடியுமா என்பதைப் பற்றியே கவலையடைந்தனர். உபத்திரவத்திலிருந்து தங்களைத் தப்புவிக்கும்படி அவர்கள் கேட்கவில்லை, ஆனால் ஊழியத்*

*திற்குத் தங்களைப் பெலப்படுத்தும்படியே அவர்கள் கேட்டனர். தாங்கள் பயமுறுத்தப்பட்டவர்களாய் இராதபடி உதவி செய்யும்படி அவர்கள் கர்த்தரைக் கேட்டனர்! எல்லாவற்றுக்கும் மேலாக, அவருடைய வசனத்தைத் தைரியமாய்ப் பேசவும், அவருடைய சித்தத்தை வல்லமையோடு செய்யவும் அவர்கள் விரும்பினார்கள்!*

## தேவன் உங்களுக்குத் தேவையான பெலத்தைத் தருவார் என்று நம்புங்கள் *(4:31)*

*அவர்கள் கற்பனை செய்து பார்ப்பதற்கு முன்பாகவே பதிலைப் பெற்றனர்! "அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம்*[35] *அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" (வ. 31). இது "இன்னொரு பெந்தெகொஸ்தே"*[36] *அல்ல. மாறாக தேவன் அவர்களோடு இருப்பதைத் தெரிவித்த ஒரு தெளிவான வழியாகும் - பின்னாளில் இதே போல அவர் சிறைச்சாலையை அசைக்கவிருந்தார் (அப். 16). "பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு" என்பது அநேகமாக வசனம் 8ல் உள்ளதைப் போன்றதே.*[37] *வசனம் 8ல் "பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து" ஆலோசனைச் சங்கத்தாரிடம் பேசினார். இப்பொழுது, "அவர்கள் [அப்போஸ்தலர்கள்] எல்லாரும் [பேதுருவைப் போலவே] பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு [பேதுருவைப் போலவே, வ. 13] தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்." ஆலோசனைச் சங்கத்தார், இயேசுவின் நாமத்தைப் பற்றிப் பேசக்கூடாதென்று இரண்டு மனிதர்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தனர். அந்த எச்சரிக்கையானது அவ்விருவரையும் அமைதியாயிருக்கும்படி செய்வதற்குப் பதிலாக, பன்னிரெண்டு மனிதர்கள் இயேசுவின் நாமத்தினாலே குணப்படுத்தவும் மற்றும் பிரசங்கிக்கவும் செய்யக்கூடிய விளைவை ஏற்படுத்தியது! "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள் ..." (4:33); "அப்போஸ்*

*தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங் களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டன ..." (5:12)!*

*இயேசு, தமது அப்போஸ்தலர்களுக்குச் செய்திருந்த அதே வாக்குத்தத்தத்தை நமக்குச் செய்திருக்கவில்லை. நாம் இருக் கின்ற கட்டிடத்தைத் தேவன் அசைப்பதில்லை, அல்லது ஆவியின் ஏவுதலினால் நாம் பேசும்படி அவர் செய்வதில்லை. ஆயினும், இது தேவன் நம்மைப் பெலமற்றவர்களாய் விட்டு விட்டார் என்று பொருள் தராது. அவர் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (எபி. 13:5ஆ, 6). நமக்கு உதவி செய்ய அவர் தமது ஆவியைத் தந்திருக்கிறார் (அப். 2:38). "நமக்குள்ளே கிரியை செய்கிற ஆவியை" அவர் நமக்குத் தருகிறார் (எபே. 3:20). நமது வழியில் சோதனைகள் வரும் போது அவைகளைத் தாங்கத்தக்கதாக, அவைகளுக்குத் "தப்பிக்கொள்ளக்கூடிய போக்கையும்" அவர் தருகிறார் (1 கொரி. 10:13). இந்நாட்களில் அவர் சபையின் கட்டிடத்தை அசைக்காமலிருக்கலாம், ஆனால் சபையை[38] அவரால் அசைக்க முடியும். இவ்விதமாக நாமும் கூட, வசனத்தைத் தைரியமாய்ப் பேச முடியும்!*

## *முடிவுரை*

*சாத்தான், அப்போஸ்தலர்களைப் பேசாமலிருக்கச் செய்யும்படி முயற்சி செய்தான், ஆனால் அதில் அவன் தோல்வியுற்றான். நம்மையும்கூடப் பேசாமலிருக்கச் செய்ய சாத்தான் ஒவ்வொரு வழியிலும் முயற்சி செய்து கொண்டிருக் கிறான். ஆயினும், நமது வேதப்பகுதியிலிருந்து பெற்றுக் கொண்ட ஆலோசனைகளைப் பின்பற்றி நாம் தேவனிடத்தில் அதிகமாய் நெருங்குவோம், சாத்தான் நம்மிடம் கூடத் தோல்வியடைவான்! "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்போது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்" (யாக். 4:7).*

*சாத்தான் அவ்வளவு எளிதாக விட்டுவிட மாட்டான். அதிகாரம் 5ல் - உள்ளிருந்தும் வெளியில் இருந்துமாக-சாத்தான் மறுபடியும் சபையை அழிக்க முயற்சி செய்ததை நாம் காண் போம். அதே போன்று, சாத்தான் உங்களையும் அவ்வளவு*

*எளிதாக விட்டுவிட மாட்டான். மறுபடியும் யாக்கோபு 4:7ஐப் பாருங்கள்: நீங்கள் "பிசாசுக்கு எதிர்த்துநிற்க" வேண்டுமானால், முதலாவது, "தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்க" வேண்டும். உங்கள் சொந்தத்தில் நீங்கள் சாத்தானை எதிர்த்து நிற்க முடியாது; உங்களுக்கு தேவனுடைய உதவி தேவை! உங்கள் வாழ்க்கையை நீங்கள் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்காதிருந்தால், உடனே அதைச் செய்யுங்கள்!*

---

*குறிப்புகள்*

[1]*கிரேக்க மொழியில் இவ்விடத்தில்* "Sanhedrin" *என்றுள்ள வார்த்தை* NIV*யில் இவ்விதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை ஆலோசனைச் சங்கத்தின் அறைகளைக் குறிக்கிறது.* [2]*இந்த இரகசியக் கூட்டத்தின் விபரங்களை லூக்கா எப்படி அறிந்தார் என்று விளக்கவுரையாளர்கள் வியப்படைகின்றனர். சிலர், பவுல் அல்லது கமாலியேல் (பவுலின் ஆசான்) அல்லது இவ்விருவருமே அங்கு இருந்திருக்கலாம் என்றும், என்ன நடந்தது என்பதைப் பவுலிடமிருந்து லூக்கா அறிந்திருக்கலாம் என்றும் சுட்டிக் காட்டுகின்றனர். மற்றவர்கள், பின்னாளில் மனமாற்றம் பெற்ற ஆசாரியர்களில் சிலர் (6:7) அல்லது பின்னாளில் மனமாற்றம் பெற்ற பரிசேயர்களில் சிலர் (15:5) அங்கிருந்திருக்கலாம் என்று குறிப்பிடுகின்றனர். ஆயினும் லூக்கா, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார் என்பதைச் சிந்தையில் கொள்ளும்போது எல்லா இடர்ப்பாடுகளும் அகற்றப்படுகின்றன. மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடப்பவற்றையும்கூட தேவன் அறிகிறார்!* [3]*பிச்சைக்காரனைக் குணமாக்கிய எடுத்துக்காட்டு, பின்வரும் மூன்று பண்புகளை விளக்குகிறது: உடனடியானது - 3:7; முழுமையானது - 4:10; நம்பச் செய்வது - 4:16.* [4]*சுற்றி வளைத்துப் பேசும் மக்கள், மற்றவர்களும் சுற்றி வளைத்துப் பேசுபவர்களாக இருக்க வேண்டுமென்றே எதிர் பார்க்கின்றனர்.* [5]*"சாத்தானுக்கு ஒரு அங்குலம் கூட இடமளிக்க வேண்டாம்" என்றால் "சாத்தானுடன் சிறிது தூரம்கூட சென்றுவிட வேண்டாம்" என்று பொருள். மெட்ரிக் அளவைகள் புழங்கும் இடத்தில் நீங்கள் இருந்தால், இக்கருத்தை விளக்க, இதற்குச் சமமாக அவ்விடத்தில் வழங்கப்படும் உள்ளூர் அளவையை இவ்விடத்தில் மாற்றாகப் பயன்படுத்தலாம்.* [6]*நாட்கள் செல்லச்செல்ல, சபைகள் சுய - சேவையில் அதிகமதிகமாக ஈடுபட்டு, சுவிசேஷ ஊழியத்தில் குறைவுபடுகின்றதற்குச் சாய்கின்றன. இது சாத்தானுடைய நோக்கத்திற்கு மிகச் சரியாகப் பயன்படுகிறது. அநேக சபைகளில் செயல்பாடுகள் அவனை அமைதி குலையப் பண்ணுவதேயில்லை!* [7]*ஒரு சிறு குழந்தை, எதிர்ப்பு சக்தியற்றுள்ள நிலையைக்கூட இவ்விடத்தில் விளக்கமாகப் பயன்படுத்தலாம். சபையின் தொடக்க நாட்களில் இந்நிகழ்ச்சிகள் நடந்தன.* [8]*"இந்தப் பிரகடனம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் என்னவாயிருக்கும்?"*

என்று ஒரு வகுப்பில் நான் கேட்டபோது, ஒரு மனிதர், "இவ்விஷயங்களைப்பற்றிப் படிப்பதற்கு இந்த இரவில் நாம் இங்கு அமர்ந்திருக்க மாட்டோம்" என்று பதில் அளித்தார். [9]இயேசுவை அவர்கள் அகப்படுத்த முயற்சி செய்த அநேக முறைகளில், அவர் அவர்களை இரண்டில் ஒன்றை ஏற்கவேண்டிய சிக்கலான சூழ்நிலைக்குட்படுத்தினார். கிறிஸ்துவின் வாழ்க்கையில் இதே போன்ற ஒரு சூழ்நிலையை மத். 21:24-27ல் காணவும். [10]முதல் குற்றத்திற்கு எச்சரிக்கை மட்டும் கொடுப்பது ஆலோசனை சங்கத்தாரின் கொள்கையாயிருந்தது என்று சில எழுத்தாளர்கள் கோட்பாடு செய்துள்ளனர். ஆயினும், வேத வசனப்பகுதியில், ஆலோசனைச் சங்கத்தார், அப்போஸ்தலர்களைத் தண்டிக்கவே விரும்பினார்கள், அவர்கள் அவ்வாறு செய்ய ஒரு சிறிய சாக்குப்போக்கு கிடைத்திருந்தால் - மற்றும் மக்களுக்கு அவர்கள் பயப்படாதிருந்தால் - அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க அவர்கள் தயங்கியிருக்க மாட்டார்கள்.

[11]நடபடிகள் நூலின், C.H. Rieu அவர்களின் மொழிபெயர்ப்பில், "அவர்களைத் தண்டிக்கச் சாக்குப்போக்கு ஒன்றையும் அவர்களால் காணமுடியவில்லை" என்று குறிப்பிட்டுள்ளது. [12]பேதுருவையும் யோவானையும் பயமுறுத்த முயற்சிசெய்த அவர்கள் அதில் தோல்வியுற்றனர். அதற்குப் பதில் அவர்களே - மக்களால் - பயமுறுத்தப்பட்டனர். [13]அம்மனிதனின் வயது வலியுறுத்தப்படுவது ஏனென்றால் (1) ஒவ்வொருவரும் அறிந்திருந்தபடி அவன் அநேக காலமாகப் பிச்சைக்காரனாயிருந்திருக்கிறான், (2) இயற்கையான குணம் கிடைக்கக் கூடிய வயதை அவன் தாண்டியவனாயிருந்தான், (3) இது அந்த அற்புத ம் உண்மையானது என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தது. [14]அப்போஸ்தலர்களின் வல்லமைபற்றி ஆலோசனை சங்கத்தார் சிறிது பதற்றமும் அடைந்திருக்கலாம்! [15]இவைகள் யாவும் தெளிவாய் வைக்கப்பட்டிருந்தால் - இவைகளில் ஒன்றுகூட தவறானதாயிருக்கவேண்டும் என்று அவசியமில்லை. [16]"ஒருமனப்பட்டு" என்ற சொற்றொடர் நடபடிகள் நூலில் சுமார் பன்னிரெண்டு இடங்களில் வருகிறது. ஆதி சபையின் ஒருமைப்பாடு அவர்களுடைய வெற்றியின் "இரகசியத்தின்" ஒரு பகுதியாக இருந்தது! [17]"அவர்கள் ... தேவனை நோக்கிச் சத்தமிட்டு" என்று வசனப்பகுதி கூறினாலும், வழக்கமான நடைமுறையே பின்பற்றப்பட்டிருக்கும்: ஒரு நபர் அங்குள்ள யாவரின் உணர்வுகளையும் உரைத்திருப்பார் மற்ற யாவரும் சேர்ந்து "ஆமென்" என்றிருப்பார்கள். [18]ஜெபங்கள் ஒரு சடங்காச்சாரமாக இருப்பதற்கு மாறாக, ஒரு பதில் செயலாய் இருக்கவேண்டும். ஒரே விதமான சொற்றொடர்களை மறுபடி மறுபடி உங்கள் ஜெபங்களில் பயன்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள். சூழ்நிலைக்குப் பொருத்தமான ஜெபங்களை ஏறெடுங்கள். [19]"எல்லாவற்றையும்" என்பது மனிதனையும் உள்ளடக்கியுள்ளது. மனிதன் தேவனால் படைக்கப்பட்டான்; மனிதன் இயற்கையாக உண்டாகவில்லை. [20]இப்பொழுது போலவே, அப்பொழுதும் "despot" என்ற வார்த்தை அடிக்கடி, மோசமாக உய்த்துணரப்பட்டிருந்தது, ஆகவே தேவனுக்கு இவ்வார்த்தை அரிதாகவே பயன்படுத்தப்பட்டது. ஆயினும், வழக்கத்திற்கு மாறான இந்த பலமான வார்த்தை இவ்விடத்தில் மிகவும் தகுதியானதாகவே இருந்தது.

[21]NIV, RSV முதலிய மற்ற மொழிபெயர்ப்புகள் "எஜமான்" (Goodspeed), "அனைத்தையும் ஆளுபவர்" (Knox) அல்லது "சர்வவல்லவரான தேவன்"

(Norlie) போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றன. [22]ஜெபத்தில் வேத வசனத்தைக் குறிப்பிடுவதற்கு, இது ஒரு முன்னோடியாகும் - ஆனால் இதை அதிகப்படுத்த வேண்டாம். ஜெபம் செய்வது என்பது பிரசங்கம் செய்வதற்கான நேரம் அல்ல. [23]"கொந்தளித்து" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தையானது, சாராயம் குடித்துக் கனைக்கும் குதிரை யொன்று எவ்வளவு திமிறினாலும், நிறைவாக ஒழுங்காகக் கட்டுப்பட்டு தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதற்குப் பயன்படும் வார்த்தை யாகும். [24]ஆவியானவரின் ஏவுதலுக்கு இவ்விடத்தில் இன்னொரு முக்கிய குறிப்புள்ளது. சங்கீதம் 2ஐ யார் எழுதியது என்று இது நமக்குச் சொல்லு வதைக் கவனியுங்கள். [25]பல விளக்கவுரையாளர்கள், மூல கிரேக்க மொழியில் வசனம் 25 குழப்பமான நிலையில் உள்ளதாகக் குறிப்பிடுகின்ற னர் - ஆனாலும் அதன் பொருள் தெளிவாக இருப்பதாகக் கூறுகின்றனர். [26]இஸ்ரவேலின் அரியணைக்குத் தொடர்புடைய சில சங்கீதங்களைக் குறிப்பிடும் ஒரு வழி, அவைகளை ''ராஜரீக சங்கீதங்கள்'' என்று அழைப்பதாகும். புதிய இராஜாக்களை ஏற்படுத்துகையில் இவைகளில் அநேக சங்கீதங்கள் யூதர்களால் பயன்படுத்தப்பட்டன. [27]சமஸ்த இஸ்ரவேல் முழுவதற்கும் தாவீது இராஜாவாக முடிசூட்டப்பட்ட போது, பெலிஸ்தியர் கள் அந்நாட்டின் மீது படையெடுத்தனர். [28]தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர் மீது தொடுக்கப்படும் எந்த ஒரு தாக்குதலும் தேவனையே தாக்குவதாகும் என்று சங்கீதக்காரர் அறிவித்தார் - தேவனுக்கு அறைகூவல் விடுக்கும் எவரொருவரும் தோல்வியுற்று அழிவார்கள்! [29]இஸ்ரவேலர்களின் இராஜாக்களைப்போல இயேசு எண்ணெயினால் அபிஷேகம் பெறவில்லை. மாறாக அவர் தமது ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்றார் (மத். 3:16, 17; அப். 10:37, 38). [30]KJVயில் இவ்விடத்தில் "பிள்ளை" யென்றுள்ளது, ஆனால் மூலபாஷையில், வசனம் 26ல் "தாசன்" என்பதற்குள்ள கிரேக்க வார்த்தையே இவ்விடத்திலும் பயன்பட்டுள்ளது. KJVயிலும் இது இப்படியே காணப்படுகிறது. அப். 3:13ல் "பிள்ளை" என்ற வார்த்தையின் அடிக்குறிப்பில் காணவும்.

[31]பழைய ஏற்பாட்டில் "ஜனங்கள்" என்பது இஸ்ரவேலைச் சுற்றியிருந்த அந்நிய தேசத்தின் ஜனங்களைக் குறித்தது. அப்போஸ்தலர்கள் "ஜனங்கள்" என்ற வார்த்தையை இஸ்ரவேலுக்குப் பயன்படுத்தினர். வேறு வார்த்தை களில் சொல்வதானால் இஸ்ரவேல் தேசம் இயேசுவைப் புறக்கணித்தபோது, அது தேவனுடைய விசேஷித்த ஜனமாயிருப்பதினின்று விலகிப் போயிற்று; அதுவும் ஒரு அந்நிய தேசமாயிற்று! [32]வகுப்பறையில் இப்பாடத்தை நீங்கள் பயன்படுத்தினால், வகுப்பிலுள்ளவர்கள் அச்சூழ்நிலையில் இருந்தால் என்ன ஜெபித்திருப்பார்கள் என்று கேட்க நீங்கள் விரும்பலாம். [33]இதே போன்ற ஜெபத்தை, 2 இராஜா. 19:14-19; ஏசா. 37:17 இவற்றில் காணவும். "கவனித்து அதன்படி செய்யும்" என்பது வலியுறுத்தப்பட்டது. [34]தாவீதையும் இயேசுவையும் அவர்கள் "ஊழியக்காரர்" (தமிழில் "பிள்ளை") என்றனர் (வ. 26, 28, 30) ஆனால் தங்களை "கட்டுப்பட்ட ஊழியக்காரர்கள்" அல்லது "அடிமைகள்" என்று அழைத்துக்கொண்டனர் (தமிழில் இது "ஊழியக் காரர்" என்றுள்ளது). [35]"இடம்" என்பது 1:13ன் மேல் வீடாக இருக்கலாம் என்று சிலர் யூகிக்கின்றனர், ஆனால் நாட்கள் ஆகிவிட்டிருந்ததால், அவர்கள் மேல் வீட்டில்தான் கூடி வந்திருப்பார்கள் என்று நம்பத் தகுந்த

காரணம் இல்லை. தேவாலயத்தில் சாலமோன் மண்டபத்தினருகில் இருந்த (5:12) ஒரு அறையாக இருந்திருக்கலாம். உண்மையில் இது எவ்விடம் என்பதற்கான கருத்து ஒன்றும் நம்மிடம் இல்லை. [36]முன்பே குறிப்பிட்ட படி, அப். 2ன் பெந்தெகொஸ்தே என்பது ஒரேமுறை மட்டும் நடந்த நிகழ்ச்சியாகும். [37]"ஆவியினால் நிறையப்பட்டு" என்பதன் எளிய பொருள் "ஆவியின் கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல்" என்பதாகும். அங்கிருந்த குழுவில் அப்போஸ்தலர்களுடன் கூட மற்றவர்களும் இருந்திருந்தால், எபே. 5:18ல் காணப்படுவதுபோல, அற்புதமற்ற விதத்தைக் குறிக்கும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கும்: அவருடைய சித்தத்திற்கு உங்கள் வாழ்வை ஒப்புக் கொடுத்து ஆவி உங்கள் வாழ்வை நிறைப்பதற்கு அனு மதியுங்கள் (இதுவே புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டதாகும்). நாம் ஆவியின் கட்டுப்பாட்டிற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது, நமது வாழ்க்கை ஆவியின் கனிகளைத் தரும்படி அவர் நம்மில் நிறைகிறார் (கலா. 5:22, 23). இந்நிகழ்ச்சியில், ஆவியின் பிரசன்னமானது அவர்கள் வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னதில் வெளிப்படுத்தப்பட்டது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இவ்வசனப்பகுதி அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்லாது, பொதுவாக கிறிஸ்தவர்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடும். ஆயினும், பேதுரு தம்முடனிருந்த அப்போஸ்தலர்களையே தேடிச் சென்றார் என்றும், அவர்களே (அப்போஸ்தலர்களே) ஜெபித்தனர் என்றும், அவர்களே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டனர் என்றும், அவர்களே வசனத்தைத் தைரியமாய்ப் பேசத் தொடங்கினர் என்றும் நான் நம்புகின்றேன். இந்நிழ்ச்சி வரைக்கும், லூக்கா, உபத்திரவத்திற்கு முன்னதாகப் பேதுரு மற்றும் யோவான் ஆகிய இருவர் மட்டுமே தைரியமாய்ப் பேசியதாகப் பதிவு செய்துள்ளார். இப்பொழுதோ எல்லா அப்போஸ்தலர்களும் அதைச் செய்ததாக அவர் எழுதினார். [38]அதாவது, சபையின் உறுப்பினர்களை அவர் அசைக்க முடியும்.